**OS No.64/2021**
DW 2 – சிவக்குமார்

நாள் 07.04.2026

**பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் வாதிக்கு விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்று கேட்டால் ஆவணம் இல்லை. வாய்மொழியாகத் தான் விட்டுக்கொடுத்தேன்.

சர்வே எண் 125/8 க்கு வாதி பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். ஆனால் முன்னோர்கள் பெயரில் உள்ளது. மேற்படி சொத்திற்கு நிலவரி ரசீதுகள் முன்னோர்கள் பெயரில் தான் போட்டு வருகிறேன் என்றால் சரிதான்.

தாவா சொத்து வாதிக்கு சீதனமாக கொடுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வாதி பல்வேறு நபர்களுக்கு ஒத்திக்கு வைத்து அவர் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

நிரூபண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் செல்லத்துரைக்கு ஒத்திக்கு வைத்தற்கான ஆவணம் உங்களிடம் உள்ளதா என்றால் இல்லை அதை வாதி தான் திருப்பிக்கொண்டார்.

காந்திசேர்வை எப்போது இறந்தார் என்றால் 2006 – 2007 வாக்கில் இறந்தார். அதற்கான இறப்பு சான்று என்னிடம் உள்ளது ஆனால் வாரிசு சான்று இன்னும் நான் பெறவில்லை. இறப்பு சான்றை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது.

உங்கள் தகப்பனார் சர்வே எண் 99/1 சி என்ற நிலத்தை வாதிக்கு அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளதற்கு ஏதேனும் உங்களிடம் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதைப் பற்றி வழக்கிற்கு தேவையில்லாததால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அதைப்பற்றி நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

எவ்வளவு பணத்திற்கு வாதி அடமானம் வாங்கினார் என்ற விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண

வாக்குமூலத்தில் 8 வது பத்தியில் சொல்லியுள்ள 10.11.1987 ம் தேதியிட்ட பதிவு பாகவிஸ்தி பத்திரத்தை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தின் அசல் எங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதில் வாதி காமாட்சியை எந்த தரப்பிலும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதில் சாட்சியாகவும் வாதி காமாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது மேலே சொன்ன விஷயங்கள் எல்லாம் நீதிமன்றத்திற்கு தெரியக்கூடாது என்பதால் மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தை ஏற்கனவே வாதியின் பெற்றோர்களான காந்திசேர்வை – மீனாம்பாள் ஆகியோர்வாதிக்கு சீதனமாக கொடுத்துவிட்டதால் தான் 10.11.1987 ம் தேதிய பாகவிஸ்தி பத்திரத்தில் வாதியை தரப்பினராகவும், சாட்சியாகவும் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி பாகவிஸ்தியில் சொல்லப்பட்ட விசயங்கள் முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். இன்னபிற சொத்துக்ளை பின்னர் பிரித்துக்கொள்ளலாம் என்று 10.11.1987 ம் தேதிய பாகவிஸ்தியில் சொல்லப்பட்டுள்ளதில் அந்த இன்னபிற சொத்துக்கள், என்னென்ன சொத்துக்கள் சர்வே எண்கள் எவை எவை என்பது பற்றி பாகவிஸ்தியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

என் தகப்பனார் சிவாஜியின் தம்பியான தனசேகரன் என்பவர் சுமார் 40 வருடங்களாக வாதி காமாட்சிக்கு ஆதரவாக உள்ளார் என்றால் சரிதான். அதே வேளையில் கடந்த 40 வருடங்களாக மேற்படி தனசேகரன் எங்களுடன் பகையாக உள்ளார். அதனால் தான் வாதி காமாட்சி பெயரில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது தனசேகரன் பெயரில் புகார் கொடுத்தீர்கள் என்றால் வாதியும், தனசேகரனும் கடையில் வந்து பிரச்சினை செய்ததால் நாங்கள் புகார் கொடுத்தோம். கடையை இழுத்து பூட்டுங்கள் என்று வாதியும் தனசேகரனும் சொன்னதால் தான் பிரச்சினை ஏற்பட்டது.

வழக்கு சொத்திற்கும் உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் வாதிக்கு அவர்கள் பெற்றோர் சீதனமாக கொடுக்கப்பட்டு வாதிக்கு

திருமணம் ஆன காலத்தில் இருந்து வாதியின் பாத்தியத்திலும், அனுபவத்திலும் தாவா சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

தாவா சொத்து சம்பந்தமாக வாதியிடம் நீங்கள் இடையூறு செய்யததால் அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் முழு சொத்தும் வேண்டும் என்று புகார் கொடுத்தார்கள்.

நீங்கள் தாவா சொத்தில் பங்கு கேட்டதால் தான் நீங்கள் நடத்திவரும் பங்கு கொடுக்க வேண்டும் என்று வாதி கேட்டார் என்றால் ஏற்கனவே பாகவிஸ்தி செய்து முடித்த பின்பு கடையை நான் எனது பணம் ரூபாய் 35000/- ஐ போட்டு வாங்கியுள்ளேன். என் அப்பாவிற்கு ரூபாய் 35000/- கொடுத்து செட்டில்மெண்ட் செய்து கடையை வாங்கினேன். அதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் பாகவிஸ்தி பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது.

அந்த மாதிரி எழுதப்படாததால் தான் அந்த பாகவிஸ்தி பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்களுக்கும் இந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் உங்களுக்கு உரிமையும், அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

-Sd-

**District Munsif,**
**Manamadurai.**